## IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 26.06.2025

SC. 202/2022

அ.சா 6 – கிருஷ்ணன்

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 26 ம் நாள் **கிருஷ்ணன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணன் | தந்தை பெயர் | வெங்கடேஷ் |
| வயது | 29 | கிராமம் | ஆருப்பள்ளி |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை : –**

நான் தற்போது ஆருப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் இளநீர் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடநத் 11.02.2020 ம் தேதி இரவு 7.30 முதல் 8.00 மணியளவில் எதிரி கார்த்தி அ.சா 1 சீனிவாசனை வெட்டி விட்டதாக கேள்விப்பட்டேன். சின்னத்தம்பிக்கும் செல்வத்திற்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்தது. செல்வம் சின்னதம்பியை வெட்டிவிட்டார். எதிரி செல்வதிற்கு மாமா ஆவார். மேற்படி பிரச்சனை சம்மந்தமாக எதிரி குடும்பத்திற்கும் அ.சா 1 ன் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்தது. சம்பவம் நடந்து அதன் பின்பு 3 நாள்கள் கழித்து 13.02.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நான் சூளகிரிக்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது கும்பளம் ஜங்சனில் சூளகிரி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார். அப்போது வந்து கொண்டிருந்த என்னை காவல் உதவி ஆய்வாளர் அழைத்து விசாரித்தார். என்னையும் , எதிரி கார்த்திக்யையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று கார்த்திகை போலிசார் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு பகல் 12.00 மணி முதல் 2.00 மணி சுமாருக்கு என் முன்னிலையில் எதிரி கார்த்தியின் SPLENDOR இரு சக்கர வாகனத்தை போலிசார் கைப்பற்றினார்கள். பின்பு எதிரி கார்த்திக் வீட்டின் பின்புறம் சென்று கத்தி ஒன்றை போலிசார் கைப்பற்றினார்கள். அதற்கு நான் சாட்சி கையொப்பம் போட்டேன்.

என்னுடன் மற்றொருவரும் சாட்சி கையொப்பம் செய்தார், அவர் பெயர் ஞாபகம் இல்லை, தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 3** ஆகும் . தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். SPLENDOR இரு சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 4** ஆகும் . கொடுவாள் கைப்பற்றபட்டதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 5** ஆகும் . தற்போது நீதிமன்றத்தில் உள்ள ச.பொ 1 கொடுவாளைத் தான் போலிசார் எதிரியின் வீட்டின் பின்புறம் இருந்து எடுத்ததாக சாட்சி அடையாளம் காட்டுகிறார். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. போலிசார் என்னை விசாரித்து எனது வாக்குமூலத்தை தட்டச்சு செய்தார்களா என்றால் ஆமாம் . கடந்த 2016 ம் ஆண்டு செல்வம் சின்னத்தம்பியை கொலை செய்து விட்டார் என்று நான் என்னுடைய வாக்குமூலத்தில் போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.,சா 1 ன் தாயாரும் எனது தாயாரும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் இல்லை ஆனால் அ.,சா 1 ன் தாயார் எனக்கு சித்தி உறவு முறை தான் என்கிறார். சீனிவாசன் என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கார்த்திக் மற்றும் பால்ராஜ் அ.,சா 1 ஐ அடித்ததாக கேள்விப்பட்டேனா என்றால் ஆமாம். மேற்படி இருவரும் BAJAJ PULSAR இரு சக்கர வாகனத்தில் வந்ததாக கேள்விப்பட்டேனா என்றால் ஆமாம்.

2. இந்த வழக்க சம்பவத்தின் போது அ.,சா 1 க்கு திருமணம் ஆகி இருந்தது என்றால் சரிதான். அ.,சா 1 ன் மனைவி பெயர் தெரியாது அவர் எங்கள் சமுதாயத்தை சார்ந்தவர் அல்ல. அ.,சா 1 க்கும் அவரது மனைவியின் குடும்பத்தினருக்கும் அடிக்கடி தகராறு நடக்கும் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே , சம்பவம் நடப்பதற்கு முன்பு லஷ்மணன் குடும்பத்தினர் மீது அ.,சா 1 ன் குடும்பத்தினர் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி குடும்பத்தினர் அவரது அண்ணன் சின்னத்தம்பி கொலை செய்யப்பட்ட பின்பு ஊரை விட்டு காலி செய்து வேறு ஊரில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் சமயம் எதிரி குடும்பத்தார் வேறொரு ஊரில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க இந்த வழக்கில் நான் சாட்சியாக உள்ளேன் என்றால் சரிதான். கைப்பட எழுதப்பட்ட எந்தவொரு ஆவணங்களிலும் போலிசாரிடம் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்ததில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur